www.tamilarangam.net

## யாழ்ப்பாணம் முற்றுகை

# போர்முனையில் பிரபாகரன்



ஒராண்டாகவே யாழ்ப்பாண மாவட்டமும், நகரமும் விடுதலைப் புலிகள் வசமே இருந்து வருகிறது. சென்ற ஆண்டு யாழ். நகரில் இருந்த காவல் நிலையம் புலிகளால் தாக்கப்பட்ட பிறகு, மிச்சமிருந்த சிங்களப் பொலிசாரும் வெளியேறி இராணுவம் தங்கியுள்ள கோட்டைக்குள் போய்விட்டார்கள்.

இந்த ஜனவரி முதல் யாழ். நகரில் போக்குவரத்து ஒழுங்கு போன்ற பணிகளைச் செய்யவும், சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க ஒரளவு சிவில் நிர்வாகப் பணியில் இறங்கவும் விடுதலைப் புலிகள் இயக்கம் முடிவு செய்தது. புலிகளின் நிர்வாக செயலால் தனது நிர்வாகம் முழுக்க இப்பகுதியில் அகற்றப்பட்டுவிட்டதை உலகம் அறிந்துவிடுமே என்று ''நட்டப்பட்டது இலங்கை அரசு, கைதிகள் பரிமாற்றத்திலும் இலங்கை அரசின் மானம் கப்பலேறிய சமயம் இது! யாழ். மாவட்டத்தைப் பணியவைக்க அங்கே எரிபொருள் போவதையும், உணவுப் பொருட்கள் போவதையும் தடுத்து நிறுத்திவிட்டது இலங்கை அரசு. பட்டினி போட்டுப் பணியவைக்கும் முயற்சி இது!

யாழ்ப்பாணத்தை இப்படி ஒரு பொருளாதார முற்றுகை நடத்தும் பீதியைக் கிளப்பி அந்தநேரத்தில் தனது இராணுவத் தாக்குதலையும் வேகப்படுத்தியது சிங்கள அரசு.

யாழ்ப்பாணம் மாவட்டம் முழுவதும் சிங்கள இராணுவம் தனது முகாமைவிட்டு வெளியேவந்து தாக்குதல் நடத்தியது. குண்டு வீச்சு விமானங்கள், துப்பாக்கிகள் பொருத்திய ஹெலிகாப்டர்கள் துணைநின்றன, விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தினர். பெரிய அளவில் சிங்கள இராணுவம் முன்னேற முடியவில்லை என்பதே உண்மை.

யாழ்ப்பாணம் நகரில் கோட்டையில் சிங்கள இராணுவ முகாம் இருக்கிறது. அங்கிருந்து பீரங்கித் தாக்குதல்கள் மணிக்கணக்கில் நடத்தினர். விமான குண்டுவீச்சும் நடந்தது. கோட்டையைச் சுற்றி வியூகம் அமைத்தவிதத்தில் விடுதலைப் புலிகளின் ஏராளமான காவல் நிலையங்கள் உள்ளன. இராணுவம் கோட்டையை விட்டுச் சற்று வெளியேவந்தால் போதும்... சளைக்காமல் விடுதலைப் புலிகள் பயங்கர எதிர்த்தாக்குதல் நடத்தினர்.

சென்ற வாரம் நடந்த யுத்தத்தில் சிங்கள இராணுவம் கோட்டையையொட்டி சற்று தூரத்தில் உள்ள யாழ். நகர தொலைபேசி நிலையத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். இது ஒரு வீரபராக்கிரமச் செயல் போல செய்தி பரப்பப்பட்டது. இந்த தொலைபேசி நிலையம் விடுதலைப் புலிகள் வசத்தில் இருக்கவில்லை. 48 தமிழர்கள் அங்கே வேலை செய்துவந்தார்கள். தொலைபேசி நிலையத்தைத் தாங்கள் பிடித்தால் வெளிஉலகத்துடன் உள்ள தொடர்பு குலையும் என்ற காரணத்தால் விடுதலைப் புலிகள் அதைத் தொடாமல் விட்டுவைத்திருந்தனர்.

'கோட்டைக்கு மிக அருகில் உள்ளது இந்தத் தொலைபேசி நிலையம். நேராக சிங்கள ராணுவம் இதனுள் நுழைந்திருக்கலாம்... சில குண்டுகளை வீசி, தொலைபேசி நிலையத்திற்குச் சேதம் விளைவித்து விட்டுப் பிடித்தனர்! அதற்கு அவசியமே இல்லை!'' என்றார் புலிகளில் ஒருவர்.

ஜனவரி முதல் வாரத்தில் நடந்த யுத்தத்தின் போது பாருக் என்ற ஓர் இளம் வீரரைப் புலிகள் பறிகொடுத்தார்கள். அவர் ஒரு பகுதியின் காவலுக்குப் பொறுப்பான லெப்டினன்ட். சம்பவத்தன்று ஒரு பகுதியின் காவல் கடமையில் இருந்த இன்னொரு கோஷ்டியினர். சிங்களவர் கோட்டையை விட்டு வருவதாக மக்களை எச்சரித்துவிட்டு ஓடிவிட்டனர். இதை அறிந்த பாருக்கும் உண்மைப் பெயர்- அனிபா) சிலன் என்பவரும் ராணுவத்தினர் நகரில் நுழையமுடியாதவாறு ஒரு பாதுகாப்புச் சுவரில் பதுங்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். சிங்கள முன்னேற்றத்தைச் சிறிது நேரம் தடுத்து நிறுத்தினர். அதற்குள் விடுதலைப் புலிகள் பட்டாளம் அந்த இடத்திற்கு விரைந்தது. ராணுவத்தைத் துரத்தி அடித்தது. ஆனால், பாருக்கும், சிலனும் வீரமரணமடைந்தனர்.

முஸ்லிம் மக்களுக்கும் தமிழர்களுக்கும் இடையே பிரிவினையைத் தூண்டி வருகிறது சிங்கள அரசு. அந்த நிலையில் யாழ். தமிழர்களைக் காக்க இன்னுயிரைக் கொடுக்கிறார் பாருக். அவருக்கு வயது 26 தான். மட்டக்களப்பைச் சேர்ந்தவர்.

யாழ் கோட்டையைச் சுற்றி உள்ள புலிகளின் காவல் நிலையங்கள் நிலைமையிக்க பாசறை ராணுவ நடமாட்டத்தை இந்த சென்றிகளின் மூலம் அறிந்து, அந்தப்பகுதிக்குப் புலிகள் பட்டாளம் விரையும் போது மக்கள் வாழ்த்தொலி எழுப்புவது நகரில் சர்வசாதாரண காட்சியாகும்!

> ''கைதிகள் பரிமாற்றத்திலும் இலங்கை அரசின் மானம் கப்பலேறி விட்டது'' எனத் தெரிவிக்கின்ற 21-1-1987ஆம் திகதி 'ஜூனியர் விகடன்' இதழ் கட்டுரையொன்றினை வாசகர்களுக்குத் தருகிறோம்.

### ஆனையிறவுக் கொடுமை...

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு ஆனையிறவு கணவாய் மூலமாகவே லாரிகளில் பொருட்கள் வரவேண்டும். ஒரு பாலத்தைக் கடந்து வரவேண்டும். சிங்கள ராணுவ முகாம் இருக்கிறது. எரிபொருட்கள் யாழ்மாவட்டத்திற்குள் நுழையாமல் இங்கே ராணுவம் தடுக்கிறது. பிறகு லாரிகளும் தடுக்கப்பட்டன. கொழும்பிலிருந்து வந்த முட்டைகளைக் கூட ராணுவம் இங்கே தடுத்துப் பறித்துக் கொண்டது.

இங்கே ராணுவம் தீவிரமாகப் பொருட்களைத் தடுத்து நிறுத்துகிறதா என்பதை நேரில் 'செக்'' செய்ய ராணுவ மந்திரி அதுலத்முதலி இரண்டு முறை வந்து பார்த்தார்! அவர் வந்துபோன பிறகு கெடுபிடிகள் இன்னும் அதிகமாயிருக்கின்றன.

மெதுவாக அரிசியும் தடை செய்யப்படும் என்றும் மின்சாரம் நிறுத்தப்படும் என்றும் யாழ். மாவட்ட மக்கள் பயப்படுகிறார்கள். விடுதலைப் புலிகள் இந்தப் பொருளாதார முற்றுகையை எதிர்பார்த்து இதற்குத் தயாராக இருக்கும் விதத்தில் பல மாதங்களுக்கு முன்பிருந்தே பிரசாரம் செய்து வந்திருக்கிறார்கள். டீசல் பெற்றோல் இல்லாததால் சைக்கிளில் மக்கள் 15 மைல்வரை போகிறார்கள்! யுத்தத்தில் காயம் அடைந்தவர்களை இரண்டு சைக்கிள்களைச் சேர்த்து, அதில் படுக்க வைத்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் காட்சியைக் காணலாம். நீர் இறைப்பதற்கு மோட்டார் பம்புகளுக்குப் பதில் காற்றாடிகள், சைக்கிள் பெடல் சிஸ்டம் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் எல்லோரும் [illegible] அடைந்திருக்கின்றனர்.

[illegible] என்று விடுதலைப் புலிகள் பிரசாரம் செய்து வருகின்றனர். ஈழத் தமிழ் மக்கள் இந்தச் சோதனைகளைத் தாங்கிக் கொண்டுவிட்டனர் என்றே சொல்ல வேண்டும்.

### பெரிய தாக்குதலுக்கு....

யாழ்ப்பாணத்தில் தொலைபேசி நிலைய கட்டடத்திலிருந்து சிங்கள ராணுவம் அடிக்கடி மக்கள் வசிக்கும் பகுதிகளை நோக்கி குண்டுப் பிரயோகம் செய்து வருகிறது. அந்தப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுவிட்டன. அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுவிட்டனர். யாழ்ப்பாணத்தில் உள்ள சிங்கள ராணுவ முகாம்கள் அனைத்தும் குறிப்பிட்ட ஒரே நாளில் பெரியதொரு தாக்குதல் நடத்தத் திட்டமிட்டிருப்பது போல் தெரிகிறது. கப்பல் மூலமும், விமானம் மூலமும் சிப்பாய்களும், ராணுவத் தளபாடங்களும் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்படுகிறது. யாழ். கோட்டையில் உள்ள ராணுவத்தினருக்கு ஆயிரக் கணக்கில் குண்டு துளைக்கமுடியாத உடைகள் கொழும்பிலிருந்து விமானத்தில் கொண்டுவரப்பட்டன.

''குண்டு துளைக்காத உடைகள் சிங்களச் சிப்பாய்களின் உயிரைக் காக்க உதவாது. எங்களிடம் உள்ள சில ரகத் துப்பாக்கிகள் முன் இது கேலிக்கு உரியது'' என்றார் ஒரு விடுதலைப் புலி.

அதோடு ராணுவம் உள்ளே வரக்கூடிய பாதைகளில் எல்லாம் புலிகள் கண்ணி வெடிகளைப் புதைத்து வைத்துள்ளனர். இந்தக் கண்ணி வெடிகளுக்குப் பயந்தே ராணுவம் முன்னேறாமல் தயங்கியிருக்கிறது.

இலங்கை ராணுவம் தென் ஆபிரிக்காவில் இருந்து புதுவகையான கவச வண்டிகளை வாங்கியிருக்கிறது. இவை கண்ணி வெடிக்கு நொறுங்காதவை என்று சொல்லப்பட்டன. ஆனால், பருத்தித்துறை பகுதியில் இம்மாதிரி ஒரு தென் ஆபிரிக்க கவச வண்டி, புலிகளின் கண்ணிவெடிக்கு நொறுங்கி, சிங்களச் சிப்பாய்கள் செத்தார்கள். நொறுங்கிய கவச வண்டியைப் புலிகள் மக்கள் பார்வைக்கு வைத்திருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகளிடம் நவீன ஆயுதங்களுக்குப் பஞ்சமில்லை. அதோடு நவீன ஆயுதங்களை இயக்கும் முறையில் கைதேர்ந்தவர்களாக உள்ளனர்! யாழ்ப்பாணம் கோட்டை, பலாலி, காங்கேசன்துறை, பருத்தித்துறை முகாம்களில் இருந்து வெளிக்கிளம்பிய சிங்கள இராணுவத்தை நவீன ரக ஆயுதங்களால் தான் புலிகள் எதிர்கொண்டனர். சிறு ரக பீரங்கிகள், ராக்கெட்டுகள், சக்தி மிகுந்த யந்திரத் துப்பாக்கிகள் இவர்களிடம் உள்ளன. பதினான்கு வயது தமிழ்ச் சிறுவன் கூட மகத்தான வீரச் செயல் படைக்கும் பூமியாக யாழ்ப்பாணம் மாறிவிட்டது.

யாழ்ப்பாணம் நகரில் ஆங்காங்கே மண்மூட்டைகள் அடுக்கப்பட்ட பாதுகாப்பு அரண்கள் உள்ளன. இங்கெல்லாம் தற்போது ஆறு அடிஉயரமுள்ள காங்கிரீட் பாதுகாப்புச் சுவர்கள் எழுப்பப் பட்டு விட்டன. இது தவிர பல வீதிகளில் புலிகளால் பழைய வாகனங்கள், மண்மூட்டைகள், தார் பீப்பாய்கள் போன்றவற்றால் தடுப்புகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன. சிங்கள இராணுவம் ஒவ்வொரு அங்குலமாகத்தான் நகர முடியும்!

''நைஜீரியாவில் விடுதலை கோரி 'பயாஃப்ரா' நாட்டை பிரகடனம் செய்ததும், நைஜீரிய அரசு இப்படித்தான் சகல தொடர்புகளையும் துண்டித்து 'பயாஃப்ரா'வைப் பட்டினி போட்டு அடக்கியது. ஆனால், பயாஃப்ரா நிலைமையை இங்கு ஏற்படுத்த முடியாது'' என்று 'ஈழமுரசு' என்ற யாழ்ப்பாண மாவட்டப் பத்திரிகை வீரமுழக்கமிடுகிறது.

இன்று—

இலங்கை அரசின் பொருளாதார முற்றுகையால் வர்த்தகம், விவசாயம், போக்குவரத்து, கல்வி என்று அனைத்தும் பாதிக்கப்பட்ட நிலையில் இருந்தும் யாழ்ப்பாண மக்கள் அஞ்சாமல் நிற்கிறார்கள். இன்னும் வரக்கூடிய கொடுமைகளைக் கற்பனை செய்து அதற்கும் தயாராகவே காத்திருக்கின்றார்கள்.

### 'தம்பி வந்தாயிற்று!'

சில நாட்களுக்கு முன்பு ஒரு விடியற்காலை நேரத்தில் யாழ் நகரில் எங்கோ அதிர்வேட்டு முழங்கியது.

விடுதலைப் புலிகளிடையே திடீரென்று மகிழ்ச்சி அலை பரவியது.

சில மணி நேரங்களில் நகரம் எங்கும் வேதனை மறைந்து நம்பிக்கை உணர்வு பளிச்சிட்டது! 'தம்பி வந்தாயிற்று' என்ற செய்தி மந்திரம் போல வேலை செய்தது!

''விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் சென்னையில் இருந்து திரும்பிவிட்டார்!'' என்று யாழ் தமிழர்கள் மகிழ்ந்ததாகப் பத்திரிகை நிருபர்கள் தகவல் அனுப்பியிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகள்மீது போலீஸ் எடுத்த நடவடிக்கைகளால் மனம் நொந்திருந்த பிரபாகரன், யாழ்ப்பாணம் திரும்ப முடிவு செய்திருந்தார் இலங்கை அரசு யாழ். பகுதியில் பொருளாதார முற்றுகையைத் துவக்கியவுடன் மக்கள் துயரத்தில் தானும் பங்குபெற துடித்தார் பிரபாகரன். புலிகளின் அரசியல் பிரசார பிரிவினரைத் தவிர்த்து, மற்றவர்கள் யாழ்ப்பாணம் திரும்பி விட்டார்கள். பிரபாகரன் போகும் நாள்மிக ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. அதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரே ஒரு சென்னைப் பத்திரிகையாளரிடம் மட்டுமே பிரபாகரன் விடைபெற்றார்.

அவர் புறப்படும் நாள் மனைவியிடம் கூட தெரிவிக்கப்படவில்லை. ஜனவரி 4ம் தேதி அவர் சென்னையிலிருந்து தலைமறைவானார். ஆறாம் தேதியன்று பாக் ஜலசந்தியை ரகசியமாகக் கடந்து யாழ்ப்பாணத்தை அடைந்தார்.

ஏற்கனவே ஈரோஸ் இயக்கத்தின் தலைவர் பாலகுமாரன் டிசம்பர் கடைசியில் யாழ் வந்து விட்டார். பிரபாகரனுடன் இணைந்து விடுதலைப் போரை நடத்துகிறார் பாலகுமாரன். இனிமேல் ஈழப் பிரச்சனையின் தலையாய இடம் என்பது சென்னை அல்ல யாழ்ப்பாணம் தான்!

இலங்கை அரசின் செல்வாக்கில் திளைக்கும் சில இலங்கை பத்திரிகை நிருபர்கள், விடுதலைப் புலிகளின் யாழ்ப்பாண தளபதியான கிட்டுவுக்கும் பிரபாகரனுக்கும் கருத்து வேறுபாடு என்ற புரளியைக் கிளப்பி விட்டார்கள். விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு நேரடிப் பேச்சுவார்த்தை நடத்த கிட்டுவைத் தொடர்பு கொண்டதை அடுத்து இந்தச் செய்தி பரப்பப்பட்டது. கிட்டு தன் ஒவ்வொரு செயலுக்கும் பிரபாகரனிடம் அனுமதி பெற்றே இயங்கினார். பிரபாகரன் திரும்பியதால் இந்த விஷமப் பிரசாரங்களும் முடிவு பெற்றன.

பொங்கலுக்குப் பிறகு தீவிரத் தாக்குதல் நடத்த இலங்கை ராணுவம் ஆயத்தம் செய்வதாகச் சொல்லப்படும் நிலையில்—போர் முனையில் பிரபாகரன் இருப்பது விடுதலைப் புலிகளின் மன உறுதிக்குப் பெரும் வலிமை சேர்த்துவிட்டது.

## தமிழீழ விடுதலைப் புலிகளில் 435 போராளிகள் இதுவரை உயிர்த்தியாகம்

யாழ்ப்பாணம், புதன் — தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு இதுவரை உயிர்த்தியாகம் செய்த விடுதலைப்புலிகளின் தொகை 435 ஆக அதிகரித்துள்ளது. கடந்த 14ம் திகதி வல்வெட்டித்துறையில் எதிர்பாராத வகையில் நடந்த வெடிவிபத்தில் பத்து விடுதலைப்புலிகள் பலியானதைத் தொடர்ந்தே இறந்தோர் தொகை 435 ஆக அதிகரித்துள்ளது. (ஓ)

LTTE (UK)
54, TAVISTOCK PLACE
LONDON WC1

